# September 22, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழகத்தில் டெங்கு காய்ச்சல் பரவல் அதிகரித்துவரும் நிலையில், காய்ச்சல் பரவலைத் தடுக்க விரிவான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு முதல்வர் ச.ஜோசப் விஜய் உத்தரவிட்டார்.

(i) தமிழகத்தில் இது வரை 17,277 பேர் டெங்கு காய்ச் சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். சென்னை, செங்கல்பட்டு, கோவை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, சேலம், திருவள்ளூர், காஞ்சிபுரம், தஞ்சாவூர், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் டெங்கு பரவல் அதிக அளவில் உள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

(ii) மேலும், 'ஸ்கரப் டைபஸ்' எனும் உண்ணிக் காய்ச்சலால் இதுவரை 4,648 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை தெரிவித்துள்ளது.

(iii) டெங்கு காய்ச்சலுக்கு 'எலைசா ஐஜிஎம் டெஸ்ட்' என்ற பரிசோதனை செய்யப்படுகிறது.

2. இந்தியா-நியூ ஸிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (எஃப்டி.ஏ) அக்டோபர் 20-ஆம் தேதி அமலாகும் என மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

(i) கடந்த ஏப்ரல் 27-ஆம் தேதி கையொப்பமிடப்பட்ட இந்த ஒப்பந்தம், நியூஸிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தியப் பொருள்களுக்கு வரிவிலக்கு அளிக்கிறது. இது தொடர்பாக பியூஷ் கோயல்செய்தியாளர்களிடம்திங் கள்கிழமை கூறியதாவது:

- இந்தியா-நியூஸிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் இந்தியாவில் அடுத்த 15 ஆண்டுகளில் ரூ.1.91 லட்சம் கோடி (20 பில்லியன் டாலர்) வரையிலான முதலீடுகளை நியூஸிலாந்து மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- இத்தகைய வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒப்பந்தம் அக்டோபர் 20- ஆம் தேதி அமலாகிறது. இந்தியாவின் விவசாய உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வகையிலான தொழில்நுட்ப உதவிகளை இநத ஒப்பந்தம் மூலம் நியூஸிலாந்து வழங்கவுள்ளது.
- இரு நாட்டு மக்கள் மற்றும் வணிகத்துக்கு அதிக பலன்களை தரும் வகையில் இந்த ஒப்பந்தத்தை அமல்படுத்துவதே தற்போதைய நோக்கமாகும்.
- பால், வெங்காயம், கொண்டைக் கடலை, பட்டாணி, பாதாம், செயற்கைத்தேன் மற்றும் சர்க்கரை ஆகிய பொருள்கள் ஒப்பந்த வரம்புக்குள் கொண்டுவரப் படவில்லை. சர்வதேச புவிஅரசியல் சூழலில் நிலையற்றத்தன்மை நிலவும் நிலையில், இந்தியா-நியூஸிலாந்து இடையேயான ஒப்பந்தம் இருநாட்டு வணிகர்களின் நம்பகத்தன்மையை

அதிகரிக்கும்.

(ii) கனடாவுடன் அக்.5-இல் பேச்சுவார்த்தை:

- இந்தியா-கனடா இடையேயான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் (சிஇபிஏ) குறித்த ஐந்தாம் கட்ட பேச்சுவார்த்தை அக்.5-இல் நடைபெறவுள்ளது. இருநாடுகளின் இருதரப்பு உறவில் அடுத்த 90 நாள்கள் மிகவும் முக்கியத்து வம்வாய்ந்தது.

(iii) இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையேயான வர்த்தக ஒப்பந்தம் அடுத்த சில மாதங்களில் அமலுக்கு வரவுள்ளது.

(iv) இந்தியா- சிலி வர்த்தக ஒப்பந்தம் குறித்து அண்மையில் சிலி சென்ற வர்த்தகச் செயலர் ராஜேஷ் அகர்வால் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். விரைவில் நல்ல செய்தி வரும் என நம்புகிறேன் என்றார்.

(v) இந்தியா, சீனா உள்பட ரஷியாவிடமிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயு கொள்முதல் செய்யும் நாடுகள் மீது 100 சதவீதம் வரி விதிக்கும் உத்தரவில் கடந்த செப்.18-ஆம் தேதி அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கையொப்பமிட்டார்.

3. பொலிவியாவின் காடுகளில் மிகச் சிறிய புதிய காட்டுப் பூனை இனம் ஒன்றை விஞ்ஞானிகள் அடையாளம் கண்டுள்ளனர்.

(i) டிக்ரினோ என அன்பாக அழைக்கப்படும் இந்தப் பூனை, 'லியோபாட்ஸ் தில்காயோ' எனும் புதிய இனத்தைச் சேர்ந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்டுகளில் விஞ்ஞானிகளால் விவரிக்கப்பட்ட முதல் உயிருள்ள புதிய காட்டுப் பூனை இனம் இதுவாகும்.

(ii) வெறும் 46 செ.மீ. நீளமும், 1.4 கிலோ எடையும் கொண்ட இது, ஒரு சராசரி வீட்டுப் பூனையை விட சிறியதாகும். வனவிலங்கு சரணாலயத்தில் கடந்த 2017-ஆம் ஆண்டு முதல் பராமரிக்கப்பட்டு வரும் இந்த அபூர்வ பூனையைக் காண தற்போது பார்வையாளர்கள் குவிந்து வருகின்றனர்.

4. ஐ.நா.சபையின் 81-ஆவது ஆண்டு அமர்வின் உயர் நிலைப் பொது விவாதக் கூட்டம், அமெரிக்காவின் நியூயார்க்கில் செவ்வாய்க்கிழமை (செப். 22) தொடங்குகிறது; போர், ஏ.ஐ. அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நூற்றுக்கும் மேற்பட்ட உலகத் தலைவர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். ஐ.நா. சபையின் 81-ஆவது ஆண்டு அமர்வு, கடந்த செப். 8 முதல் அதிகாரபூர்வமாக தொடங்கியது. இதன் முக்கிய நிகழ்வான உயர்நிலைப் பொதுவிவாதம் செவ்வாய்க்கிழமை (செப். 22) தொடங்கவுள்ளது.

(i) உலகெங்கும் தீவிரமடைந்து வரும் மோதல்கள், மனிதகுலத்துக்கு அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ள கட்டுப்பாடற்ற ஏ.ஐ. தொழில்நுட்பம், புவிவெப்பமய மாதல் மற்றும் பருவநிலை மாற்ற பாதிப்புகள் குறித்த அச்சங்களுக்கு மத்தியில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

(ii) மேலும், கப்பல் போக்குவரத்து முடக்கம் மற்றும் விநியோகச் சங்கிலி பாதிப்புகளால் உலகப் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள மந்தநிலை, கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தை பாதித்துள்ள சூழலில் இந்த மாநாடு நடைபெறுகிறது.

(iii) சர்வதேச அமைதியைப் பாதுகாப்பதிலும், போர்களை முடிவுக்குக் கொண்டுவருவதிலும் ஐ.நா. வின் செயல்பாடுகள் பின்தங்கியுள்ளதாகவும், அமெரிக்காவின் நிதி நிலுவைகளால் அமைப்பு நிதி நெருக்கடியைச் சந்திப்பதாகவும் விமர்சனங்கள் உள்ளன. இத்தகைய பல்வேறு சவால்களுக்கு இடையிலும், உலக நாடுகளை ஒன்றிணைக்கும் மையமாக ஐ.நா. சபை திகழ்கிறது. அந்தவகையில், செவ்வாய்க்கிழமை முதல் தொடங்கும் பொது விவாதக் கூட்டத்தில் சுமார் 130 நாட்டுத் தலைவர்கள் மற்றும் அமைச்சர்கள் உரை யாற்றுகின்றனர்.

(iv) விவாதிக்கப்படும் விவகாரங்கள்...

- புவிசார் அரசியல் கவலைகள் ஒருபுறமிருக்க, மறுபுறம் மனிதக் கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் ஏ.ஐ. தொழில்நுட்பம் இம்முறை மாநாட்டின் முக்கிய விவாதப் பொருளாக உருவெடுத்துள்ளது. முன்னணி ஏ.ஐ. நிறுவனங்கள் இத்தொழில்நுட்பத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்த வலியுறுத்தியுள்ள போதிலும், டிரம்ப் அதை நிராகரித்துள்ளார்.
- உலக அளவில் இத்தொழில்நுட்பத்தை முறைப்படுத்த எந்தவொரு நெறிமுறைகளும் இல்லாத நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் இது தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தை புதன்கிழமை பிற்பகலில் நடத்துகிறது.
- 81 ஆண்டுகளை எட்டியுள்ள ஐ.நா. சபையின் கட்டமைப்பு மற்றும் சீர்திருத்தம் குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது. 2-ஆம் உலகப் போரில் வெற்றி பெற்ற அமெரிக்கா, ரஷியா, சீனா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய 5 நாடுகள் மட்டுமே பாதுகாப்பு கவுன்சிலில் 'வீட்டோ' அதிகாரத்துடன் ஆதிக்கம் செலுத்தி வரும் நிலையை மாற்றி, அமைப்பை மறுசீரமைக்க 193 உறுப்பு நாடுகள் ஒப்புக்கொண்டுள்ள போதிலும், அதை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் நீடிக்கின்றன.
- ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸுக்கு உலகத் தலைவர்களுடன் இதுவே இறுதி மாநாடாகும். அவரின் பதவிக்காலம் டிச. 31-ஆம் தேதியுடன் முடிவடைய உள்ள நிலையில், அடுத்த தலைவர் யார் என்ற எதிர் பார்ப்பும் அதிகரித்துள்ளது.

5. ரஷிய நாடாளுமன்றக் கீழவைக்கு மூன்று நாள்கள் நடைபெற்ற தேர்தலில், அதிபர் விளாதிமீர் புதினின் ஆதரவு பெற்ற ஆளும் 'யுனைடெட் ரஷியா' கட்சி தனிப்பெரும்பான்மையைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

(i) தலைநகர் மாஸ்கோ உள்ளிட்ட பகுதிகளைக் குறிவைத்து ஒரே இரவில் 1,110-க்கும் மேற்பட்ட ட்ரோன்களை ஏவி, உக்ரைன் நடத்திய தீவிர தாக்குதல்களுக்கு மத்தியில் இத்தேர்தல் வாக்குப்பதிவு நடந்து முடிந்தது. தொடர்ந்து, வாக்கு எண்ணிக்கையில்

மொத்தமுள்ள 450 தொகுதிகளில் யுனைடெட் ரஷியா கட்சி 355 இடங்களைக் கைப்பற்றி புதிய சாதனை படைக்க வாய்ப்புள்ளதாக அந்நாட்டு தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள முதல் கட்ட முடிவுகள் தெரிவிக்கின்றன.

(ii) போருக்குப்பிந்தைய சூழலில் மக்களின் ஆதரவை வெளிப்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட இத்தேர்தலில் 59 சதவீத வாக்குகள் பதிவாகின. உக்ரைன் மீதான முழு அளவிலான போருக்குப் பிறகு நடைபெற்ற முதல் நாடாளுமன்றத் தேர்தல் இதுவாகும். போருக்கு எதிரான நிலைப்பாடு கொண்ட ஒரே மிதவாதக் கட்சியான 'யாப்லோகோ' போட்டியிட உச்சநீதிமன்றம் தடை விதித்ததும், போர் எதிர்ப்பாளர்கள் பலர் சிறையிலடைக்கப்பட்டதும் தேர்தல் களத்தில் விவாதங்களை எழுப்பியுள்ளது.

(iii) மேலும், உக்ரைனில் இருந்து இணைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட 4 பகுதிகள் மற்றும் கிரீமியாவிலும் ரஷிய ராணுவ வீரர்களின் பாதுகாப்புக்கு மத்தியில் வாக்குப் பதிவு நடைபெற்றது; இதனை உக்ரைன் சட்டவிரோதமானது எனக் கண்டித்துள்ளது. சர்வதேசதேர்தல் பார்வையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், அதிபர் புதினின் நிர்வாகம் தங்களின் விருப்பத்துக்கேற்ப தேர்தலை நடத்தி, முடிவுகளைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டுள்ளதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

6. இந்தியாவின் தற்போதைய தலைமைப் பொருளாதார ஆலோசகர் டாக்டர் வி. அனந்த நாகேஸ்வரன் ஆவார்.

7. டி-72 மற்றும் டி-90 பீரங்கிகளுக்கான துணை மின் அலகுகளை ரூ.586 கோடி மதிப்பில் கொள்முதல் செய்வதற்கான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையொப்பமிட்டது.

(i) தில்லியில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் முன்னிலையில் அக்யூரேட் இன்டஸ்ட்ரியல் கன்ட்ரோல் நிறுவனத்துடன் இந்த ஒப்பந்தம் கையொப்பமானது.

(ii) இதுதொடர்பாக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், பீரங்கியில் உள்ள தீ கட்டுப்பாட்டு அமைப்பு, பீரங்கி நிலைத் தன்மை அமைப்பு மற்றும் பிற துணை அமைப்புகளுக்குத் தேவையான மின்சாரத்தை துணை மின் அலகுகள் (ஏபியு) உருவாக்குகின்றன.

(iv) உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஏபியுக்களைச் சேர்ப்பது இந்திய ராணுவத்தின் இயந்திரமாக்கப்பட்ட படைப்பிரிவுகளின் செயல்பாட்டுத் தயார்நிலை, நம்பகத்தன்மை மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை மேலும் வலுப்படுத்தும். இதன் அடிப்படையில் அக்யூரேட் இன்டஸ்ட்ரியல் கன்ட்ரோல் நிறுவனத்துடன் ரூ.586 கோடி மதிப்பிலான ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. இது 'வளர்ச்சியடைந்த பாரதம்-2047' என்ற உயரிய இலக்கை அடைவதில் மற்றுமொரு மைல்கல்லாகும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

8. சர்வதேச பருத்தி தினம் - அக்டோபர் 7

9. ராஜதந்திர சவால்

(i) ரஷ்ய எண்ணெய் இறக்குமதியாளர்கள் மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகள் சட்டம்

- இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளைக் குறிவைத்து, ரஷ்யாவிலிருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவை இறக்குமதி செய்யும் நாடுகளின் பொருட்கள் மீது 100% வரை இறக்குமதி வரி விதிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பிற்கு அதிகாரம் அளிக்கும் சட்டத்தை அமெரிக்க நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- இச்சட்ட மசோதா தென் கரோலினா நாடாளுமன்ற உறுப்பினர் லிண்ட்சே கிரஹாம் (இவர் ஜூலை மாதம் காலமானார்) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டு, முன்னதாக செனட் சபையில் நிறைவேற்றப்பட்டது. பின்னர் இது அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையால் அங்கீகரிக்கப்பட்டு, அதிபர் ட்ரம்ப் கையெழுத்திட்டதன் மூலம் சட்டமாக்கப்பட்டது.
- எளிதில் திரும்பப் பெறக்கூடிய நிர்வாக முடிவாக இருந்த கடந்த ஆண்டின் 50% வரி உத்தரவைப் போலன்றி, இந்த நாடாளுமன்றச் சட்டம், வரி விகிதங்களை அதிகரிப்பதற்கு அல்லது குறைப்பதற்கு முன் அதிபர் நாடாளுமன்றத்திடம் எழுத்துப்பூர்வமான விளக்கத்தை சமர்ப்பிக்க வேண்டும் என்று சட்டப்பூர்வமாகக் கட்டாயப்படுத்துகிறது.
- ரஷ்யா-உக்ரைன் போர் தொடங்கி நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், தனது பொருளாதாரத்தைத் தக்கவைக்க கச்சா எண்ணெய் ஏற்றுமதி வருவாயை பெரிதும் நம்பியிருக்கும் ரஷ்யாவின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்துவதையே இச்சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

(ii) இந்தியாவின் மீது ஏற்படக்கூடிய பொருளாதாரத் தாக்கம்

- இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 20% நேரடியாக அமெரிக்கச் சந்தையைச் சார்ந்தே உள்ளது.
- முந்தைய 50% வரி விதிப்பின் கீழ், அமெரிக்க வாடிக்கையாளர்களைத் தக்கவைத்துக் கொள்ள இந்திய ஏற்றுமதியாளர்கள் தங்கள் லாப வரம்புகளைக் குறைத்துக்கொண்டதால் பெரும் இழப்பைச் சந்தித்தனர். 100% வரை வரி விதிக்கப்பட்டால், அது இந்தியாவின் நுண், சிறு மற்றும் நடுத்தர தொழில் (MSME) ஏற்றுமதியாளர்களைப் கடுமையாகப் பாதிக்கும்.
- ஏற்கனவே உள்ள 50% வரி மற்றும் கட்டாய உழைப்பு தொடர்பான விதிமுறை இணக்கத்திற்கான 10% வரி ஆகியவற்றுடன் சேர்த்துப் பார்க்கும்போது, இரும்பு, எஃகு மற்றும் அலுமினியம் உள்ளிட்ட முக்கிய இந்திய ஏற்றுமதிப் பொருட்கள் அமெரிக்கச் சந்தையில் போட்டியிடும் திறனை இழக்கும் அபாயம் உள்ளது.

(iii) உலகளாவிய எரிசக்திச் சார்பு மற்றும் இறக்குமதி புள்ளிவிவரங்கள்

- 2022-ல் ரஷ்யா-உக்ரைன் போர் தொடங்கியதிலிருந்து, ரஷ்ய கச்சா எண்ணெயின் முக்கிய இறக்குமதியாளர்களாக சீனா (50%), இந்தியா (37%),

துருக்கி (5%) மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (5%) ஆகியவை உள்ளன.

- முந்தைய ஆண்டில் தங்கள் இயற்கை எரிவாயுவில் 15%-க்கும் அதிகமான பகுதியை ரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்த நாடுகளுக்கும் இச்சட்டம் பொருந்தும்.
- ஜூலை 2026 நிலவரப்படி, இந்தியாவின் மொத்த கச்சா எண்ணெய் இறக்குமதியில் 51% ரஷ்யாவிலிருந்து பெறப்படுகிறது.
- கச்சா எண்ணெய் விலை ஏற்கனவே ஒரு பீப்பாய்க்கு 100 டாலருக்கும் அதிகமாக உள்ள நிலையில், மேற்கு ஆசியாவில் நிலவும் மோதல் சூழலைக் கருத்தில் கொள்ளும்போது, ரஷ்யாவிற்கு வெளியே மலிவான மாற்று எண்ணெய் ஆதாரங்களைப் பெறுவது தற்போது சாத்தியமற்றதாக உள்ளது.

(iv) அமலாக்கத் தடைகள் மற்றும் மூலோபாயக் காரணிகள்

- உலகளாவிய விநியோகச் சங்கிலிகளில் இருந்து ரஷ்ய கச்சா எண்ணெயைக் கட்டுப்படுத்துவது, பற்றாக்குறையைத் தூண்டி விலைகளை உயர்த்தக்கூடும், இது அமெரிக்க நுகர்வோர் மீது பணவீக்கத்தைத் திணிக்கும்.
- நவம்பரில் அமெரிக்க இடைக்காலத் தேர்தல்கள் நெருங்கி வருவதால், அதிபர் டிரம்ப் அதிகபட்ச சுங்க வரி அபராதங்களை அமல்படுத்தத் தயங்கக்கூடும்.
- ரஷ்ய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களைத் தாக்குவதற்கு எதிராக அமெரிக்கா முன்னதாக உக்ரைனை எச்சரித்தது, இது ரஷ்ய எண்ணெய் விநியோகத்தை முழுமையாக நிறுத்துவதில் உள்ள தயக்கத்தைக் குறிக்கிறது.
- அமெரிக்கச் சந்தைக்கான அணுகலை இழப்பதையோ அல்லது தனது மூலோபாய சுயாட்சியைப் பணிய வைப்பதையோ இந்தியா தாங்கிக்கொள்ள முடியாததால், அது ஒரு நுட்பமான இராஜதந்திரச் சோதனையை எதிர்கொள்கிறது.

10. கல்வியும் வேலைவாய்ப்பும் முக்கியம்

(i) கல்வி-வேலைவாய்ப்பு இடைவெளி மற்றும் வேலைவாய்ப்புச் சந்தையின் எதார்த்தம்

- பல தலைமுறைகளாக, கலை, அறிவியல் அல்லது வணிகவியல் துறைகளில் பல்கலைக்கழகப் பட்டம் பெறுவது என்பது சமூக முன்னேற்றம், உயர்கல்வி மற்றும் நிலையான வேலைவாய்ப்புக்கான ஒரு நுழைவாயிலாகக் கருதப்பட்டது; இருப்பினும், விரைவான பொருளாதார மாற்றங்கள், ஒரு பட்டம் மட்டுமே வேலைக்குத் தயாராகும் நிலையை உறுதிப்படுத்துமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளன.
- 'வளர்ச்சியடைந்த இந்தியா 2047-க்கான திறன் மேம்பாட்டை மறுபரிசீலனை செய்தல்' (Rethinking Skill Development for Developed India 2047) என்ற தலைப்பில் நிதி ஆயோக் (NITI Aayog) வெளியிட்ட அறிக்கை, உயர்கல்விப் பாடத்திட்டங்களுக்கும் சந்தையின் தேவைகளுக்கும் இடையே உள்ள பெரும் முரண்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறது.

- 2024–25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையின் தரவுகளை மேற்கோள் காட்டி, பட்டதாரிகளில் 8.25% பேர் மட்டுமே தங்கள் கல்வித் தகுதிக்கு ஏற்ற வேலைகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதை அந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது.
- பட்டதாரிகளிடையே வேலையின்மை விகிதம் 13 சதவீதமாக உள்ளது; அதே சமயம் பெண் பட்டதாரிகளிடையே இது 20.4 சதவீதமாக உள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த வேலையின்மை விகிதம் 3.2 சதவீதமாக இருக்கும் நிலையில், இந்தப் பாகுபாடு கவலைக்குரிய விஷயமாகும்.

(ii) இளங்கலைப் படிப்புகளில் மாணவர் சேர்க்கை புள்ளிவிவரங்கள்

- படித்த இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது முக்கிய சவால் அல்ல; மாறாக, வேலைவாய்ப்பு, மேற்படிப்பு அல்லது தொழில் வளர்ச்சி குறித்த தெளிவான திட்டமிடல் இல்லாமலேயே பல மாணவர்கள் பட்டம் பெறுவதே முக்கிய சவாலாக உள்ளது.
- நாடு முழுவதும் இளங்கலைப் படிப்புகளில் சேர்ந்துள்ள 3.4 கோடி மாணவர்களில், 1.13 கோடி பேர் கலைப் பாடப்பிரிவுகளில் பயின்று வருவதாக நிதி ஆயோக் தெரிவித்துள்ளது. கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் ஆகிய மூன்று பிரிவுகளையும் ஒன்றாகக் கணக்கிட்டால், மாணவர்களின் எண்ணிக்கை 2 கோடியைத் தாண்டுகிறது என்று நிதி ஆயோக் குறிப்பிடுகிறது.

(iii) திறன் பயிற்சியின் மூலம் தொடக்க ஊதியத்தில் ஏற்படும் நிதிசார் தாக்கம்

- கூடுதல் திறன் பயிற்சி பெறாத இளநிலைப் பட்டதாரி ஒருவர் மாதத்திற்கு சராசரியாக ரூ.22,000 தொடக்க ஊதியம் பெறுகிறார். அதேசமயம், திறன் பயிற்சி பெற்ற பட்டதாரி ஒருவர் மாதத்திற்கு சுமார் ரூ.29,000 தொடக்க ஊதியம் பெறுகிறார்.
- பாஸ்டன் கன்சல்டிங் குரூப் (BCG) தரவுகளை மேற்கோள்காட்டி, ஆண்டுக்கு சராசரியாக 3.2 சதவீத ஊதிய உயர்வு கிடைக்கும் நிலையில், தொடக்கத்தில் உள்ள ரூ.7,000 மாதாந்திர ஊதிய வேறுபாடு 10 ஆண்டுகளில் மொத்தம் சுமார் ரூ.9.7 லட்சமாக அதிகரிக்கும் என நிதி ஆயோக் கணித்துள்ளது.
- பணிக்காலத்தின் தொடக்கத்தில் ஏற்படும் இந்த வருமான வேறுபாடு, இளம் பணியாளரின் நிதிச் சுதந்திரம், குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றும் திறன், தனிப்பட்ட சேமிப்பு மற்றும் உயர்கல்விக்கான செலவுகளைச் சமாளிக்கும் திறன் ஆகியவற்றை நேரடியாகப் பாதிக்கிறது.

(iv) பட்டப்படிப்புகளில் தொழில் சார்ந்த சிறப்புப் படிப்புகளை ஒருங்கிணைத்தல்

- பொதுப் பட்டப்படிப்புகளை வேலையிலிருந்து துண்டிக்கப்பட்ட பரந்த கல்விப் படிப்புகளாக மட்டும் வைத்திருக்காமல், பிராந்தியப் பொருளாதார வாய்ப்புகள் மற்றும் தொழில்துறைத் தேவைகளுக்கு ஏற்ப பட்டப்படிப்புகள் வடிவமைக்கப்பட வேண்டும்.
- துறை சார்ந்த மாற்றங்கள்:

- கலை: விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா போன்ற துறைகளுக்கான பயிற்சியை இணைத்தல்.
- அறிவியல்: பயன்பாட்டுத் தொழில்நுட்பப் படிப்புகளை ஒருங்கிணைத்தல்.
- வணிகம்: தரவுப் பகுப்பாய்வு மற்றும் டிஜிட்டல் வணிகம் போன்ற பாடங்களை ஒன்றிணைத்தல்.
- பல்கலைக்கழகங்கள் தொழிற்பயிற்சி மையங்களாக மாற வேண்டிய அவசியமில்லை, மாறாக கோட்பாட்டு அறிவுக்கும் நடைமுறைச் செயலாக்கத்திற்கும் இடையிலான பாலத்தை வலுப்படுத்த வேண்டும்.

(v) உயர்கல்வியின் நோக்கம் மற்றும் சர்வதேச மாதிரிகள்

- உயர்கல்வியானது வேலைவாய்ப்புக்குத் தேவையான திறன்களை வளர்ப்பதுடன், விமர்சனச் சிந்தனை, படைப்பாற்றல், அறிவார்ந்த ஆர்வம் மற்றும் சமூக விழிப்புணர்வையும் சமநிலையுடன் வளர்க்க வேண்டும்.
- பயிற்சிப் பணியுடன் (Apprenticeship) இணைந்த பட்டப்படிப்புகள் மற்றும் பணியுடன் ஒருங்கிணைந்த பட்டப்படிப்பு திட்டங்களை விரிவுபடுத்த வேண்டும் என நிதி ஆயோக் வலியுறுத்துகிறது.
- ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்தில் பின்பற்றப்படும் மாதிரிகள், கல்வி நிறுவனங்கள், தொழில்துறைகள் மற்றும் அரசுகள் இடையேயான கட்டமைக்கப்பட்ட ஒத்துழைப்பின் மூலம், பணியிடப் பயிற்சியை உயர்கல்வியின் ஒருங்கிணைந்த அங்கமாக மாற்ற முடியும் என்பதை எடுத்துக்காட்டுகின்றன.

(vi) நிதி ஆயோக்கின் முக்கியப் பரிந்துரைகள்

- வேலைவாய்ப்புகள், தேவையான திறன்கள், எதிர்பார்க்கப்படும் ஊதியம் மற்றும் திறன் மேம்பாடு குறித்து பல மாணவர்களுக்கு தெளிவான தகவல்கள் இல்லாததால், கல்வி நிறுவனங்களில் தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.
- திறன் சரிபார்ப்பு, சான்றிதழ்கள், பயிற்சிப் பணிகள் மற்றும் பணியிட அனுபவம் ஆகியவற்றை ஒரே இடத்தில் பதிவு செய்யும் வகையில், மையப்படுத்தப்பட்ட டிஜிட்டல் திறன் பதிவேட்டை உருவாக்குவது பயனுள்ளதாக இருக்கும்.
- பணிச்சூழல் குறித்த அறிமுகத்தை மாணவர்களுக்கு ஏற்படுத்தவும், அவர்களின் தனிப்பட்ட ஆர்வங்களை அடையாளம் காண உதவவும், 6-ஆம் வகுப்பு முதலே அடிப்படைத் தொழில் மற்றும் தொழில்முனைவுத் திறன்களை அறிமுகப்படுத்த வேண்டும்.
- ஆரம்பகட்டக் கற்றல் தொகுதிகளில் டிஜிட்டல் கல்வியறிவு, நிதியியல் கல்வியறிவு, தகவல் தொடர்புத் திறன், குழுப்பணி மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை உள்ளடக்க வேண்டும்.
- பெண்கள் திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகளை சமமாகப் பெறுவதை உறுதி செய்யும் வகையில், நடைமுறை ஆதரவு அமைப்புகளை உருவாக்க வேண்டும்.

- கல்விக்கும் வேலைவாய்ப்புக்கும் இடையேயான இடைவெளியைக் குறைப்பது, இந்தியாவின் எதிர்கால மனிதவளத்தில் மேற்கொள்ளப்படும் முக்கியமான நீண்டகால முதலீடாகும்.